09.06.2026

O.S.No. 92/2024

DW1- சின்னப்பன் பெஸ்ட் – த/பெ பாக்கியநாதன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.06.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. வாதி சரஸ்வதி பிராது சொத்துக்களில் 6ல் 1 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. தபசில் சொத்துக்கள் விவசாய நிலம் என்றால் சரிதான்

3. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் படித்து அதன் விவரம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

4. 1,2 தபசில் சொத்துக்கள் வாதியின் தாத்தா ராமகிருஷ்ணநாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

5. தபசில் சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எவ்வாறு பி.வா.சா.ஆ.1 எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்ற முன் விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 53 வது பத்தியில் ரத்தினசாமி மற்றும் அவரது ஆண்வாரிசுகளுக்கு சொத்து தனித்த பாத்தியம் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

8. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 60 வது பத்தியில் தபசில் சொத்துக்களை கிரையம் செய்த பின் தபசில் சொத்தில் ஆயில் மோட்டார் வைத்து விவசாயம் செய்வதாக நான் கூறுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 65 வது பத்தியில் பாக்கியநாதன் தபசில் சொத்தில் பயிர் செய்து வருவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 66 வது பத்தியில் பாக்கியநாதன் இறப்பிற்கு பின் சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்ததாக நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல. நாளது வரை எங்களுக்குள் எந்த பாகமும் பிரிக்கப்படவில்லை.

11. தபசில் சொத்தை நான் அனுபவம் செய்வதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல.

12. வாதி தபசில் சொத்தில் பயிர் செய்த போது நான் தடை செய்ததாக வாதி ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அது பொய் புகார் ஆகும்.

13. தபசில் சொத்து வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றும் வாதிக்கு அவர் கோரிய பாகம் கிடைக்கத்தக்கது என்றும் எனவே நான் தாக்கல் செய்த ஆவணங்களை நிராகரித்து வாதியின் வழக்கை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
தென்காசி